**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 142/2015**
**நாள்.14.03.2024**
**வா.சா.1- சேகர்**
**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

ஒரே சொத்திற்காக தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண். 279/1 அதன் விஸ்தீரணம் 20 செண்ட் ஆகும். மேற்படி சொத்தை இரண்டாக பிரித்துக் காட்டி நான்குமால் தனித்தனியாக குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்து ஆதியில் நத்தம் புறம்போக்காக இருந்தது என்றால் சரிதான். அப்துல் கரீம் மற்றும் அப்துல் சத்தார் ஆகியோர்களுக்கு சர்வே எண்.279/1 ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டது என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 279/1ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அப்துல் சத்தார் மற்றும் அப்துல் கரீம் ஆகியோர்களுக்கு எந்த நான்குமால் கொண்ட சொத்துக்கள் ஜாரிபடி வழங்கப்பட்டது என பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அப்துல் கரீம் எவ்வளவு நிலங்களை எனக்கு கிரையம் செய்து கொடுத்தார் என பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

16.10.1991ம் தேதி எவ்வளவு சொத்துக்களை பின்னியப்பதேவர் கிரையம் பெற்றார் என்பதை வழக்குரையில் தெளிவாக கூறவில்லை என்றால் சரியல்ல. பின்னியப்பதேவர் எவ்வளவு சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் மூலம் 2, 3 வாதிகளுக்கு எழுதி கொடுத்தார் என்பதை பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 31.05.1972ம் தேதி ஜாரி செய்து கொடுக்கப்பட்ட உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 13.04.2010ம் தேதி எனக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களை 1,2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன். மேற்படி கிரையப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை.

தாவா சொத்திற்கு புது சர்வே எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. தாவா சொத்திற்கு தற்போது 839/5 என புது சர்வே எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்வழக்குரை மூலமாக தாவா சொத்தின் சர்வே எண் மாறுபட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள விவரத்தை தெரிந்து கொண்டு பின்னர் புலவரைபடத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் சர்வே எண் மாறுபட்டு தற்போது பாதையாக உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நான் தெரிந்துகொள்ளவில்லை. 1, 2 பிரதிவாதிகள் வீட்டிற்கு முன்பாக இருக்கும் பாதை வழியாக தான் மெயின் ரோட்டிற்கு வரமுடியும் என்றாலும், வேறு பாதை அவர்களுக்கு இல்லை என்றாலும் சரியல்ல. பொதுப்பாதை அவர்களுக்கு உள்ளது.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN
**Principal District Munsif**
**Vedasandur**